IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.65/2017

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | GOWRI |
| HUSBAND NAME | : | KUMARESAN |
| VILLAGE | : | GUDIYATHAM |
| OCCUPATION | : | INSPECTOR OF POLICE |
| AGE | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 25th day of Juy 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை.எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் காண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 16.10.2016 அன்று குடியாத்தம் கிராமிய காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது நிலைய குற்ற எண். 448/2016 பிரிவு 294(பி), 323, 324, 506(2) இதச வழக்கில் சம்மந்தபட்ட எதிரிகளான திரு.கிருபாணந்தம் த/பெ.ஆறுமுகம் மற்றும் திரு.ஸ்ரீதர் த/பெ.ஆறுமுகம் இருவரும் ஏரியான்பட்டி கிராமம்,எர்தாங்கள் அஞ்சல், குடியாத்தம் தாலுக்கா ஆகியோர்களை இரவு சுமார் 21.30 மணிக்கு தலைமை காவலர் 1959 திரு. பாஸ்கர் மற்றும் முதல் நிலை காவலர் 2152 திரு.திலிப்குமார் ஆகியோர்களுடன் வழிக்காவலாக நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தவேண்டி குடியாத்தம் குற்றவியல் நடுவர் முன்பு அவர்கள் முன்பு ஆஜர் படுத்தி காவல் அடைப்பு ஆணை பெற்று நீதிமன்ற காவலுக்கு குடியாத்தம் கிளை சிறை சாலை முன்பு அழைத்து செல்லும் போது திரு.கிருபாணந்தம் என்பவர் எங்களை பார்த்து நீ கேஸ் போட்டுவிட்டால் நீ என்ன பெரிய மயிரா என்று தரக்குறைவான வார்த்தையால் திட்டினார். மேற்படி எதிரிகள் இருவரும் எங்களை போலிஸ் நாய்களா, உங்கள் தாலி அறுக்க என்று அசிங்கமாக பேசினார்கள். முதல் நிலை காவல் திரு.திலிப்குமாரை வலுக்கட்டாயமாக இருவரும் பிடித்து தள்ளி பணி செய்யவிடாமல் தடுத்தனர். மேற்படி எதிரிகள் இருவரும் எங்களை பார்த்து நாங்கள் ஜாமீனில் வெளியில் வந்த உடன் உங்களை ஒழித்துவிடுவோம் என்று மிரட்டினார்கள். அப்போது அந்த இடத்தில் பரதாராமி காவல் நிலைய தலைமை காவலர் திரு. தினகரன் மற்றும்குடியாத்தம் அனைத்து மகளிர் காவல் நிலைய காவலர் திருமதி. நூரிபேகம் இருவரும் இருந்தனர். இச்சம்பவத்தால் என்னால் தொடர்ந்து பணி செய்ய இயலவில்லை. அன்றைய தினமே மேற்படி எதிரிகள் மீது குடியாத்தம் நகர காவல் நிலையத்தில புகார் மனு அளித்தேன்.

சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ராமராமி என்னை விசாரித்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>1 மற்றும் 2வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

புகாரை நான் கைப்பட எழுதினேன் என்றால் சரிதான். எதிரிகளை வேறொரு வழக்கில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த குடியாத்தம் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தோமா அல்லது நீதித்துறை நடுவரின் இருப்பிடத்திற்கு அழைத்து சென்றோமா என்றால் இரவு 21.30 மணி ஆகிவிட்டதால் நீதிமன்ற நடுவரின் இருப்பிடத்திற்கு அழைத்து சென்றோம். நீதிமன்ற நடுவரின் இருப்பிடம் கிளை சிறையில் இருந்து 2 நிமிடம் நடந்து செல்லும் அளவில் பக்கத்தில் தான் இருந்தது என்றால் சரியல்ல. நீதிமன்ற நடுவரின் இருப்பிடத்தில் இருந்து கிளை சிறைக்கு செல்ல எவ்வளவு நேரம் ஆகும் என்றால் 7 நிமிடங்கள் ஆகும்.

வழக்கு சம்பவம் எந்த இடத்தில் நடந்தது என்றால் கிளை சிறைச்சாலையின் சாலைக்கு முன்பு நடந்தது. எனது புகாரில் நீதிமன்ற காவல் 21.30 மணிக்கு வாங்கியதாகவும், சம்பவம் 23.00 மணிக்கு நடந்ததாகவும் சொல்லியுள்ள நிலையில் நீத்துறை நடுவர் இருப்பிடத்தில் இருந்து கிளை சிறைக்கு செல்ல 7 நிமிடங்கள் ஆகும் பட்சத்தில் மீதி சுமார் ஒன்றரை மணி நேரம் எங்கு இருந்தோம் என்றால் குடியாத்தம் கிளை சிறை சாலையிலேயே இருந்தோம். 7 நிமிடங்களில் செல்ல வேண்டிய இடத்திற்கு ஒன்றரை மணி நேரம் சாலையில் இருந்ததாக சொல்வது தவறு என்றும் மேலதிகாரிகளை அழைத்து வந்து எதிரிகளை மிரட்டுவதற்றகாக தான் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் எதிரிகள் நீ என்ன பெரிய மயிரா என்று கேட்டதாக சொல்லியுள்ள நிலையில், நான் அளித்த புகாரில் எதிரிகள் அவ்வாறு சொன்னதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. ஆனால் தரக்கறைவான வார்த்தையால் என்னை திட்டினார் என்பதை சொல்லியுள்ளேன். வழக்கிற்காக நான் சாட்சியை நீட்டித்து சொல்கிறேன் என்றாலும், உண்மையில் எதிரிகள் அவ்வாறு பேசியிருந்தால் புகாரில் சொல்லி இருப்பேன் என்றாலும் சரியல்ல.

எனது முதல் விசாரணையில் எதிரிகள் திரு.திலிப்குமாரை தள்ளிவிட்டதாக சொல்லியுள்ள நிலையில், நான் அளித்த புகாரில் எதிரிகள் அவ்வாறு செய்ததாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. புகாரில் திரு.நூரிபேகம் மற்றும் திரு.தினகரன் காவலர்கள் சம்பவத்தின் போது இருந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. வழக்கு சம்பவம் நடந்தாக சொல்லப்படும் சமயத்தில் ஆஜர் எதிரிகளின் கையில் எந்த ஆயுதமும் இல்லை என்றால் சரிதான். புகாரிலோ, போலிஸ் விசாரணையிலோ எதிரிகள் அவ்வாறு பேசியதால் எனக்கு என்ன நேர்ந்தது என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் இருவரும் அப்பாவிகள் என்றாலும், நீதிமன்ற காவலுக்காக நீதிபதியின் முன்பு ஆஜர்படுத்தியபோது போலிசார் தங்களை தாக்கியதாகவும், மிட்டியதாகவும் கூறியதால் கோபமடைந்து மேலதிகாரிகளை அழைதது வந்து எதிரிகளின் மீது பொய்யான புகார் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகாரில் உள்ள விஷயங்களை நீட்டித்து பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவலர் திரு.தினகரன் எதிரிகளை நீதிமன்ற

காவலுக்கு உட்படுத்தும்போது என்னுடன் வந்தாரா என்றால் வரவில்லை. 16.10.2016 அன்று இரவு 21.30 மணிக்கு எதிரிகள் மீது காவல் அடைப்பு அனுமதி பெற்றப்படி அன்றைய இரவு 23.00 மணிக்கு எதிரிகளை குடியாத்தம் கிளைசிறை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி விட்டேனா என்றால் நேரம் சரியாக ஞாபகம் இல்லை. ஆனால் நீதிமன்ற காவலுக்கு தலைமை காவலர் பாஸ்கரன் மற்றும் திலிப்குமார் ஆகியோர்கள் உட்படுத்தினார்கள். மேற்படி விவரத்தை புகாரிலோ, போலிஸ் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. காவலர்கள் திருமதி.நூரிபேகம் மற்றும் தினகரன் எந்த வழக்கிற்காக நீதித்துறை நடுவரிடம் வந்திருந்தார்கள் என்ற விரவங்களையும் நான் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த அழைத்து சென்ற குற்ற எண்.448/2016 என்ற வழக்கின் விவரங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எதிரிகள் எந்தவிதாமான தவறுகளையும் செய்வில்லை என்றாலும் எதிரிகள் அவர்களுடைய தரப்பு நியாயத்தை கேட்டதற்கு தவறான சங்கதிகளுடன் எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றாலும் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.